www.padippakam.com

அன்பளிப்பு 20p



# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கி வரும் பத்திரிகை 31-08-1991



# சிங்கள தேசத்தில் தங்கியிருந்தபடி போராடுவதில் அர்த்தமில்லை

■ தலைவர் பிரபா ■

தன்னிறைவுப் பொருளாதாரம் எமது இலட்சிய வாழ்விற்கு மூலாதாரமானது. தனியரசு நிர்மாணத்திற்கு அத்திவாரமானது. உணவுப் பொருட்களுக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கும் சிங்கள தேசத்தில் தங்கியிருந்தபடி தனியரசு கோரிப் போராடுவதில் அர்த்தமில்லையென தலைவர் பிரபாகரன், அர்ச்சயா பழத் தொழிற்சாலையின் முதலாவது ஆண்டு குறித்து விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வாழ்த்துச் செய்தியில் இன்று தமிழீழம் இரு முனைகளில் இரு வகையான யுத்தங்களைச் சந்தித்து நிற்கின்றது.

ஒன்று இராணுவ ரீதியான யுத்தம் ; எதிரியின் ஆக்கிரமிப்பில் இருந்து எமது மண்ணை மீட்டெடுக்க நாம் நடாத்தி வரும் தேசிய சுதந்திரப்போர், மற்றையது பொருளாதார ரீதியான யுத்தம்; எதிரியின் பொருளாதாரத் தடைகளையும் அழுத்தங்களையும் உடைத்தெறிந்து சுயசார்பான தன்னிறைவான பொருளாதார வாழ்க்கையைக் கட்டியெழுப்ப நாம் நடாத்தி வரும் உற்பத்திப் போர் இந்த இரு முனைப் போராட்டங்களையும் வெற்றிகரமாக முன்னெடுத்தால் தான் நாம் எமது அரசியல் இலட்சியத்தை அடைய முடியும்.

நீண்ட நெடுங்காலமாக எமது தாயக பூமி ஒரு தன்னிறைவான தங்குநிலையற்ற பொருளாதார வாழ்வுடைய செழிப்பான நாடாக விளங்கி வந்தது. அந்நிய காலணித்துவ ஊடுருவல்கள் எமது தேசிய பொருளாதாரக் கட்டுக்கோப்பைச் சீர்குலைத்தன. வெளிநாட்டுப் பண்டங்களும் அந்நிய நுகர்வுப் பழக்கங்களும் எமது மக்கள் மீது திணிக்கப்பட்டன. ஆங்கில ஏகாதிபத்தியம் பெருந்தோட்டப் பொருளாதார அமைப்பை உருவாக்கி ஒற்றை ஆட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தி கொழும்புச் சந்தையை மையப்படுத்தியது. இதனால் தமிழீழப் பொருளாதாரம் தனது தனித்துவத்தை இழந்து சீர்குலைந்து கொழும்புச் சந்தைக்கு அடிமைப்பட்ட தங்கு நிலையான பொருளாதார வாழ்வில் தமிழீழ மக்கள் சிக்குப்பட்டனர். சிங்கள ஆளும் வர்க்கம் இந்த தங்கு நிலையான பொருளாதாரத்தை ஊக்குவித்து வந்தது. பொருளாதார ரீதியில் தமிழர்கள் தென்னிலங்கையில் தங்கியிருக்கும் வரை தன்னாட்சி உரிமைப் போராட்டம் வெற்றி பெறாது என்பது சிங்கள பேரினவாதிகளின் கணிப்பீடு. இதனால் தான் காலத்துக்குக் காலம் விடுதலைப் போராட்டம் கூர்மையடையும் போது தமிழர்கள் மீது பொருளாதார நெருக்குதல்களை உண்டுபண்ண சிங்கள அரசு தயங்குவதில்லை. இம்முறை இந்தப் பொருளாதார நெருக்குதல் என்றுமில்லாதபடி தீவிரமாக்கப்படுகின்றது.



சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் பொருளாதார அச்சுறுத்தல் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்பட்டுள்ள மாபெரும் சவால் ஆகும். இந்தச் சவாலை நாம் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். எமது மண்ணில் எமது கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான வாழ்வை நாம் கட்டியெழுப்ப வேண்டும். இது இன்றைய வரலாற்றுத் தேவையும் கூட என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிரித்தானியாவிலிருந்து தளபதி கிட்டு வெளியேறினார்

தமிழீழ விடுதலைபபுலிகளின் மத்தியகுழு உறுப்பினரும், சர்வதேச செயலாளருமாகிய திரு.கிட்டுஎன்று அழைக்கப்படும் கிருஸ்ண குமார் பிரித்தானியாவை விட்டு வெளியேறி ஐரோப்பிய நாடொன்றிற்கு அண்மையில் சென்றுள்ளார்.

அவருக்குத் தஞ்சம் அளிக்கக் கூடிய நாடொன்றின் அழைப்புக்காக அவர் முயற்சி எடுப்பதாகவும், அல்லாது போனால் சர்வதேச மனிதாபிமான அமைப்பொன்றின் உதவியுடன் தனது தாயகத்துக்கு செல்ல விரும்புவதாகவும், கூறியுள்ளார்.

ஐரோப்பிய சமூக நாடுகள் ஒன்றினையும் இக் காலகட்டத்தில், பிராந்திய அரசொன்றின் அழுத்தம் காரணமாகவும் வேறு வர்த்தகக் காரணங்களிற்காகவும், ஐரோப்பிய சமூக நாடுகளில் திரு.-

7ம் பக்கம் தொடர்ச்சி

### பிரேமதாசாமீது எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டு

## அமைச்சர்கள் ராஜினாமா! பாராளுமன்றம் ஒத்திவைப்பு

சிறிலங்கா ஜனாதிபதி மீது அதிகார துஸ்பிரயோகம், மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி எதிர்க்கட்சியினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆதரித்து, கல்வி அமைச்சரும், தொழிற்துறை அமைச்சரும் தங்கள் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்கள். இவர்கள் திரு.பிரேமதாசை பதவி விலகும்படி செய்ய நிர்ப்பந்திக்கும் அளவு ஆதரவைப் பெற முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இவ் அமைச்சர்கள் பதவி துறந்ததைத் தொடர்ந்து, சிறிலங்கா ஜனாதிபதி பாராளுமன்றத் தொடரை ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைத்துள்ளனர். திரு.பிரேமதாசாவின் இந் நடவடிக்கை தம்மீதான குற்றப்பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிப்பதை காலம் தாழ்த்துவதற்காகவே எடுக்கப்பட்டதாகத் தென்படுகின்றது.

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்கி பிரேமதாசாவை பதவியிலிருந்து நீக்கி அவருக்கு எதிராக அரசியல் குற்றங்கள் தாக்கல் செய்யப்படவேண்டும் எனக் கோரி, முக்கிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி மனு ஒன்றை பாராளுமன்றச் சபாநாயகர் முகமத்திடம் சமர்ப்பித்துள்ளார். இந்த மனுவில் ஆளுங் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 43 பேர் உட்பட, 123 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த மனுபற்றி பாராளுமன்ற விவாதம் நடப்பதற்கு 113 உறுப்பினர்களின் கையொப்பங்களே போதுமானது. இலங்கை அரசியல் சாசனத்தின்படி, ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்குவதற்கும், அவர் மீது அரசியல் குற்றம் தாக்கல் செயவதற்கும்

7ம் பக்கம் தொடர்ச்சி

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழம் மலரும்போதுதான் எங்களது போராட்டம் ஓயும்

தமிழீழம் மலரும் போது தான் எமது போராட்டம் ஓயும். இதற்கு உங்கள் அனைவரினதும் ஆதரவு தேவை .

புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்துகையில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு.யோகரட்ணம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் பேசியதாவது :-
தமிழீழ மக்களை பட்டினி போட்டுச் சாகடிக்க சிறீலங்கா அரசு முழுமூச்சாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் எமது மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கலாம் என்று அது எண்ணுகிறது.

அரசின் திட்டத்தை முறியடிக்கவே உப உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுமாறு உங்களை நாம் கேட்டு வருகின்றோம். அரசு விதிக்கும் பொருளாதாரத்தடையை வெற்றிகொள்ள அதுவொன்றே எமக்கு இன்றுள்ள வழியாகும்.

புகையிலை, வெங்காயம் ஏன்
ஆனால் இதனை உணராத எம்மக்களில் சிலர் இன்றும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய வெங்காயத்தையும், புகையிலையையும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் உபஉணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தால் இன்று பொருளாதாரத்தடையை பெருமளவிற்கு முறியடித்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் தாம் உற்பத்தி செய்த வெங்காயத்தையும், புகையிலையையும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்காக எம்மை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு கேட்கின்றனர்.

சமதர்ம தமிழீழம்
நாம் சமதர்ம தமிழீழத்தை உருவாக்கவே போராடுகின்றோம்.எமது தமிழீழத்தில் சாதி மத பிரதேச வேறுபாடுகள் கிடையாது.

மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு போராளியும் , பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு போராளியும் ஒன்றிணைந்த தமது நெஞ்சங்களையே வெடிக்க வைத்து பருத்தித்துறையில் எதிரியின் கடற்படைக் கப்பலை நாசாமாக்கியுள்ளார்கள். இத்தகைய ஓர் உணர்வையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.
எங்களது புனித போராட்டத்தில் அனைவரும் இணைந்து கொள்வார்கள்.
அநுராதபுரம் வரை புலிக் கொடி
நீங்கள் யாரைக்கேட்டு இப் போராட்டத்தை ஆரம்பித்தீர்கள் என்று கூட சிலர் எம்மைப் பார்த்துக் கேட்கின்றனர்.

இன்றைய துன்ப நிலை தான் அவர்களை அப்படிக் கேட்க வைத்தது என்பதை நாம் அறிவோம்.

அவர்களுக்கு நாம் சொல்லக் கூடியது இது தான். எமக்கு வீரம் இருந்தது, விடுதலை உணர்வு இருந்தது, தமிழபிமானம் இருந்தது, தன்னம்பிக்கை இருந்தது. போராடுகின்றோம். உங்களுக்கும் அவ்வாறிருந்தால் எம்முடன் போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள். அவ்வாறு நீங்களும் இணைந்து கொண்டால் வடக்கே அநுராதபுரம் வரையில், கிழக்கே அம்பாறை வரையில் புலிக்கொடி பறக்கும். இல்லையேல் புதுக்குடியிருப்பிலும் சிங்கக்கொடி பறக்கும்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை எங்கே எந்தக் கொடி பறந்தாலும் எமது போராட்டம் ஓயப்போவது தமிழீழம் மலரும் போதுதான். அதற்கு உங்கள் அனைவரது ஆதரவும் வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.
விடுதலைப்புலிகள் முன்னணியைச் சேர்ந்த பரராஜசிங்கம் மற்றும் மகளிர் அணித்தலைவி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் முல்லைச் செல்வம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

## வீரமரணமடைந்த போராளிகளுக்கு அபிசேக ஆராதனைகள்

தமிழீழத்தில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளுக்காவும், தமிழீழ விடுதலைக்காகவும் வடபகுதியெங்கும் மக்களால், கோயில்களில் கூட்டுப் பிராத்தனைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. போர்க்களத்தில் நின்று போராடும் போராளிகளுக்கு ஆத்மபலம் கிடைக்க வேண்டும் என்றும், காயமடைந்த போராளிகளுக்கு பூரண சுகம் கிடைக்குமாறும் ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன.

## விடுதலை தீ கனன்று எரிகின்ற அக்கினிக் கோளங்கள்

**தமிழீழத்தில் மட்டுமல்லாமல் அந்நிய தேசங்களிலும் விடுதலைப்புலிகள் சயனைட்டை உட்கொண்டு வீரமரணத்தைத் தழுவுகின்றார்கள் என்றால் அது. "தமிழீழம் எவ்வளவு உறுதியானது அதனை எந்த அந்நிய சக்திகளாலும் அழிக்க முடியாது" என்ற உண்மையைத் தான் பறைசாற்றி நிற்கின்றது.**



தமிழீழ விடுதலைப் புலிப்போராளிகள் கொடிய விசமாகிய சயனைட்டை உட்கொள்ளுகின்றனர், ஏன் அவர்கள் அப்படி நடந்து கொள்ள வேண்டும்? உண்மையிலேயே அவர்கள் தான் உணர்வுடனும், தெளிந்த மனப்பான்மையுடனும், உறுதியாவும், கட்டுப்பாட்டுடனும் இலட்சிய வீரராக திகழ்ந்தும் உண்மையான இலக்கை நோக்கி வேகமாகவும் துணிந்தும் நிதானமாகவும் செல்கின்றனர். ஒரு போராளி எப்படியும் அவன் இலட்சிய வாதியாகத்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் வெற்றி பெற முடியும். எமது போராளிகள் சயனைட்டை எந்த நேரமும் வைத்திருப்பது அவர்களுடைய கட்டுப்பாட்டில் ஒன்று. அவர்களது நோக்கம் தமிழீழமே தவிர வேறு நோக்கமல்ல. தமிழீழம் கிடைப்பதற்காக அவர்கள் எதையும் இழக்கத் தயாரான சூழ்நிலையிலும் எந்த நேரத்தில் ஆபத்துக்கள் வந்தாலும் சமாளிக்கும் தன்மை உள்ளவர்களாயும் இருப்பர். முடியாத கட்டத்தில் தான் சயனைட்டை உட்கொண்டு வீரமரணத்தைத் தழுவுகின்றனர். அந்தக் கொடிய விசமானதுதான் அவர்களது இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக அவர்களை உறுதி தளராமல் வைத்திருக்கின்றது என்றுதான் குறிப்பிடலாம். அவர்கள் தமது உயிரைத் துச்சமென நினைத்துத் தான் இலட்சிய வேங்கைகளாகத் திகழ்கின்றார்கள். தமது தியாக மரணத்தின் மூலம் இயக்க இரகசியங்களையும் காப்பாற்றுகின்றனர். அப்படிக் காப்பாற்றப்படுவதனால் தான் எம்மை யாராலும் அழிக்க முடியாது என்பதையும் அந்த இலட்சியத்தை வென்றெடுப்பதற்காகவும், தம்மைத்தாமே அழித்துக்கொள்கின்றார்கள்.

ஆனால் சயனைட்டை உட்கொள்ளும் வீரன் உண்மையிலேயே மிகவும் மனவேதனையுடன்தான் வீரமரணத்தைத் தழுவிக்கொள்கின்றான். ஒவ்வொரு வீரனும் தாம் பல வேலைகளைச் செய்ய வேண்டும் விரைவில் தமிழீழத்தை எடுத்தே தீரவேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்கள். அப்படித்தான் நிட்சயம் இருப்பார்கள். நாம் ஓர் இனம் நமக்கென்று ஒரு நாடில்லை. எமது மூதாதையர் எம்மைப் பற்றிச் சிந்திக்காமலும், எமது நாட்டைப் பற்றிச் சிந்திக்காமலும் சுயநலமாக வாழ்ந்து விட்டனர் அன்று. ஆனால் இன்று எமது தமிழீழப் போராளிகள் தங்கள் உயிர்களை எந்த நாட்டில் இருந்தாலும் தமது இயக்கம் காப்பற்றப்பட வேண்டும், இரகசியம் பேணப்பட வேண்டும், என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சயனைட்டை உட்கொள்ள நேர்ந்தாலும் இறுதிவரை தமிழீம் என்றே அவர்கள் உச்சரிக்கிறார்கள். இப்படியான எமது தமிழீழப் போராளிகளை, இலட்சியாவாதிகளை சில மக்களும், சில நாடுகளும் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை. என்றோ ஒரு நாள் எமது

7ம் பக்கம் தொடர்ச்சி

## இது தந்திரம்...

வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு - தமிழ் மக்களுக்கு-நிவாரண உலர் உணவுப் பொருட்களை வழங்குவதை நிறுத்திவிட்டு பணம் வழங்குவது என்ற புதிய யோசனை ஒன்றை கொழும்பில் உள்ள அரசாங்க அதிகாரிகள் முன் வைத்துள்ளார்கள் !

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை அனுப்புவதில் உள்ள சிரமங்கள், கஸ்ரங்கள் அதிக செலவீனங்கள் என்பனவற்றைக் காரணம் காட்டி பணம் வாங்கும் மாற்றுத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அந்த அதிகாரிகள் மிகவும் அவசரப்படுகின்றார்கள்.

இதனைப் புதிய திட்டம் என்று சொல்வதற்குப் பதிலாக நயவஞ்சகமான தந்திரமென்று சொல்வதே சரி. தமிழ் மக்களைப் பட்டினி போடுவதன் மூலம் அவர்கள் மீது அழுத்தத்தைக் கொடுத்து குறைந்த பட்ச உரிமைகளை வழங்குவதற்கான அரசியல் சூதாட்டத்தின் ஓர் அங்கம் அது.

மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களில் பத்துச் சதவீதத்திற்கும் குறைவாகவே தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படாமையால் அவர்கள் கஸ்ரப்படுகின்றார்கள் என்று அரச அதிபர்கள் முறைப்பாடுகள் செய்தும் மாற்றுத் திட்டம் பற்றி கொழும்பு அதிகாரிகள் பிரஸ்தாபிக்கிறார்கள்.

வர்த்தகர்களோ, சமூகநலனில் அக்கரை உள்ளவர்ளோ, தொண்டர் நிறுவனங்களோ உணவுப் பொருட்களைக் கொண்டு வர முடியாமல் தடுக்கப்பட்டுள்ளன. அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இல்லையேல் தொந்தரவுகள், தொல்லைகள், கஸ்ரங்கள் கொடுக்கப் படுகின்றன.

ஆனால் உணவுப் பொருட்கள் . பற்றாக்குறை மக்களின் அன்றாட வாழ்க்கையை ஆட்டம் காண வைத்துள்ளது. கொள்வனவு செய்வதற்குச் சந்தையில் போதிய உணவுப் பொருட்கள் இல்லாமல் இருக்கும் போது , பணத்தை வைத்து மக்கள் என்ன செய்வது ? அதனைக் கரைத்துக் குடிக்கலாம் என்று கொழும்பு அதிகாரிகள் எண்ணுகிறார்களோ....?

மொத்தத்தில் தமிழ் மக்களுக்குத் தாம் தேவையான வசதிகளைச்

செய்வதாக வெளியில் காட்டிக் கொண்டால் போதும் என்பது அரச அதிகாரிகளின் நிலைப்பாடு. ஆனால் அவர்களைப் பட்டினி போட்டு, வாட்டி வதைத்து, சித்திரவதை செய்து, கொலை செய்து, உரிமைப் போராட்டம் நடத்துவதற்காக வஞ்சம் தீர்க்க வேண்டுமென்பதே உள்ளார்ந்த நோக்கம். உரிமைப் போராட்டத்தை நசுக்கி விட வேண்டுமென்பதே குறிக்கோள்.

அரசின் பொருளாதாரத் தடையை முறியடிக்கும் விதத்தில் தமிழ்ப் ப்குதிகளில் உணவு உற்பத்தி நடந்து வருகின்றது. சுய தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு அது விரைவு படுத்தப்பட வேண்டும். அது வேறு விடயம்.

தமிழர்களை அரசு இன்னமும் தனது பிரஜைகள் என்று கருதுமானால், உலர் உணவுப் பொருட்களுக்குப் பதிலாக பணம் வழங்கும் திட்டத்தைக் கைவிடுவது மட்டுமன்றி அவர்கள் மீது விடுத்துள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க வேண்டும். அவ்வாறு செய்யுமா ? பார்ப்போமே !

## பூரண விடுதலை அடைவதற்கு பண்டைய வாழ்க்கை முறை தேவை

அண்மையில் மடு அகதி முகாமில் சேவை புரியவென யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து 40 மாணவர்கள் அடங்கிய குழுவினர் சென்றிருந்தனர்.

கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களே அங்கு சென்றிருந்தனர். ஆனால் அவர்களுடன் அங்கு சென்று மருத்துவ உதவிகளைச் செய்ய இரண்டு மருத்துவ மாணவர்களைப் பிடிக்க முடியவில்லை இந்நிலையில் வருந்தத்தக்கது. மாணவர்களது மனநிலையில் மாற்றம் வர வேண்டும். யாழ்.பல்கலைக் கழகத்தில் பயிற்றப்பட்ட மருத்துவர்கள் இன்று இங்கு சேவையாற்ற இல்லை. இன்றைய இந்த நிலையில் எமது மூலவளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு மருத்துவ சேவை செய்யச் சித்தமாயுள்ள சித்த மருத்துவ மாணவர்களையும், வைத்தியர்களையும் நாம் பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம். இப்படி அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட நிர்வாக உதவி அரசியல் பொறுப்பாளர் திரு.-பாப்பா, திருமதி.கைலாசபதி, உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர், யாழ் மாநாகர ஆணையாளர் பி.பாலசிங்கம், சிவதர்ம வள்ளல் க.கனகராசா உட்பட பலர் ஆசி உரை வழங்கினர்.

சித்த மருத்துவ வைத்தியக் கலாநிதிகளும், பேராசிரியர்கள், மற்றும் மாணவர்களும் சுதேச அபிவிருத்திச் சங்கத்தினர் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சித்த மருத்துவ உற்பத்திப் பொருட்களின் தன்மை பற்றி டாக்டர் சிவ சண்முகராஜா உரையாற்றினார்.

சித்த மருத்துவபீட வைபவத்தில் திரு.பாலகுமாரன்

ஒரு தேசிய இனம் தன்னகத்தே கௌரவிக்கவும், மதிக்கவும் தனது பண்டைய வாழ்க்கை முறைகளை ஆதரிக்கவும்,R கடைப்பிடிக்கவும் எப்போது தயாராகின்றதோ அப்போது தான் அது பூரண விடுதலையை அடைந்த ஒரு சமூகமாகக் கருதப்படும்.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ இயற்கை உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு.வே.பாலகுமாரன் மேற்கண்டவாறு கூறினார்.

கைதடி சித்தமருத்துவ அரங்கில் இந்த வைபவம் நடைபெற்றது. திரு.பாலகுமாரன் மேலும் பேசுகையில் :

இந்த நிலையை நோக்கி இன்று தமிழ்ச்சமூகம் சென்று கொண்டிருப்பதை இன்றைய நிகழ்ச்சி எமக்கு உணர்த்துகிறது.

அந்த இலக்கை நோக்கி பயணத்தில் முதலாவது படியாக இந்த நிகழ்ச்சியை நாம் நினைவு கூருவோம் -என்றார்.

பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் காலத்தில் மேலைத்தேச வைத்தியத் துறையில் பட்டம் பெற்ற சுமார் 80 வைத்தியர்கள் இன்று வடக்கு-கிழக்கில் சேவையாற்றுவதற்கு இல்லை. ஆனால்

இங்கு சித்த வைதியத்துறை மாணவர்களும், வைத்தியர்

சித்த மருத்துவ உற்பத்திப் பொருட்களை துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா அறிமுகம் செய்து வைத்தார்.

## இனவாத அரசிற்கு எதிராக தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்ட வேண்டும்

- ஐ.நாவில் ஒசுக்கா-

இனவாத அரசிற்கு எதிராக தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்ட வேண்டும். ஐக்கிய நாட்டில் ஒசுக்கா-

காலணித்துவ ஆட்சிக்கு முன்னர் இலங்கை என்னும் தீவில் தமிழ்- சிங்கள அரசுகள் இருந்தன. பிரித்தானிய காலணித்துவ வாதிகள் வெளியேறும்போது சிங்கள ஆட்சியாளர்களிடம் அனைத்து உரிமைகளையும் கொடுத்துச் சென்றனர். சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த நாற்பது ஆண்டு காலமாக பல்வேறு துறைகளில் செய்துவரும் ஒடுக்கு முறையை தமிழ் மக்களின் பிரச்சினைக்கான காரணம் என ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உப ஆணைக் குழுவின் 43 வது கூட்டத் தொடரில் சர்வதேச கல்வி அபிவிருத்தி அமைப்பு என்ற ஸ்தாபனத்தின் ஜப்பானிய பிரதிநிதி ஒசுக்கா பேசினார். மேலும் அவர் பேசுகையில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியதுடன் இனவாத அரசிற்கு எதிராக தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையைகள் நிலைநாட்ட வேண்டுமென வும் பெரிய அரசுகளுக்குள்ளே உள்வாங்கப்பட்ட சிறு அரசுகளின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்படும் போது அம்மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிப்பதே அம் மக்களுடைய மனிதஉரிமைகள் பேணுவதற்கான வழியாகும் எனத் தெரிவித்தார்.- மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பிலுள்ள யாழ். வைத்திய சாலை மீது குண்டு வீசப்பட்டதையும்,எம்.எஸ்.எவ் வைத்தியக்குழு மீது விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டதையும், கொக்கட்டிச்சோலை படுகொலையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



## பேச்சுவார்தைக்கான பேச்சுக்கு புலிகள் இணக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை குறித்து பேசுவதற்கு தாம் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது. அரசாங்க அமைச்சர் செளமிய மூர்த்தி தொண்டமான் இதன்பொருட்டு யாழ்ப்பாணம் வருவதானால் அவரை வரவேற்கத் தயாராக. இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகளின் இச்செயல் ராஜதந்திர ரீதியாக பந்தை எடுத்து அரசாங்கப் பக்கம் வீசும் நடவடிக்கையாக அரசியல் அவதானிகளால் வர்ணிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட விடுதலைப்புலிகள் பேச்சாளர் திலகர் விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களின் சுதந்திரத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலமோ அல்லது பேச்சுவார்த்தையின் மூலமோ வென்றெடுப்பதற்காக எப்போதும் தயாராக இருப்பதாகவும், சிறீலங்கா அரசாங்கமோ விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், தமிழீழ மக்களை அடிமை கொள்ளவும் இராணுவ நடவடிக்கையையும் பேச்சுவார்த்தை நாடகத்தையும் ஒருங்கே கையாண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனையிறவு முகாமைத் தற்காலிகமாகக் காப்பாற்றியுள்ள சிறீலங்கா அரசு இராணுவ முதன்மை பெற்றுள்ளதாக தன்னையே பாராட்டிக் கொள்ளும் அதே வேளை நேர்மையான நேரடிப் பேச்சுவார்த்தைக்கு தடையாக முன் நிபந்தனைகளையும் பலவித தடுப்புகளையும் ஏற்படுத்தி வருவதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். பேச்சுவார்த்தைக்கு முன்னதாக ஆயுதங்களைக் கீழே போடவேண்டும், சகல கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி மகாநாட்டிலேயே பரச்சினை தீர்க்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகளைத் தொடர்ந்து மூர்க்கமாக அரசாங்கம் வலியுறுத்தி வருகின்றது. அரசாங்கத்தின் பின்னணியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழீழ மக்களின் அபிலாசைகளை சிதைத்து சிறீலங்காவின் ஒற்றையாட்சிக்குள் தீர்வைக்காண ஏற்படுத்தப்பட்டுள்ள இன்னொரு அமைப்பாகும் என்பது தெளிவாகி உள்ளது. இவ்வாறு திலகர் கூறினார். பேச்சுவார்த்தையின் முன்னுள்ள முன் நிபந்தனைகள் நீக்கப்பட வேண்டுமென்பதை எப்போதும் போல் வலியுறுத்தியுள்ளார்.

## அகதிகள் ஆர்ப்பாட்டம் அதிரடிப்படை அதிகாரிகள் மிரட்டியும் பணிய மறுப்பு

அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகள் தவிர்ந்த ஏனைய அகதிகளுக்கு, உலர் உணவுப் பொருட்களையும், ஏனைய நிவாரனப் பொருட்களையும் வழங்குவதில்லை என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து சிறிலங்கா அரசின் இந்த அறிவிப்பை முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் கடுமையாக எதிர்த்துள்ளன. வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த அகதிகள் அனைவருக்கும் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் அப்படி வழங்கப்படாத பட்சத்தில் இத்தகைய நிவாரணம் எமக்குத் தேவைப்படாது என மட்டக்களப்பு, காரைதீவு விபுலாநந்த மகாவித்தியாலய அகதி முகாமில் தங்கியிருக்கும் அகதிகள் ஆர்பாட்டம் செய்ததுடன் தமது பெயர் விபரங்களையும் பதிய மறுத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து சிறிலங்காவின் அதிரடிப்படை

5ம் பக்கம் தொடர்ச்சி

எம்முடைய எழுத்துக்களும், பேச்சுக்களும் மக்களைப் போய்ச் சேரக்கூடிய வகையில் எளிமையாக இருக்க வேண்டும். எம்முடைய அறிவை வெளிக்காட்ட அவர்களுடைய நேரத்தை வீணாக்கும் உரிமை எமக்கு இல்லை.

வே.பிரபாகரன்.

www.padippakam.com



# அண்ணனின் கடிதம்...

பாசமுள்ள உடன் பிறப்பே!
கனிவான எனது நல்வாழ்த்துக்களை ஏற்றுக்கொள். நீ கிளப்பிய பல பிரச்சினைகளையும் கவனத்திற் கொண்டேன். ஒவ்வொரு பிரச்சினைகளாகப் பதில் கூற அனுமதி வழங்கு. எவ்வளவு பசியாக இருந்தாலும், என்னதான் சுவையான உணவாக இருந்தாலும் சோற்றைக் கவளம் கவளமாகத் தானே உண்ண முடியும்.

எங்கோ ஓர் கருத்தரங்கில் நீ பேசும்போது, மக்கள் விழாக்களிலும், வைபவங்களிலும் ஈடுபட்டு வருவதைக் கண்டிருந்தாய் என்பதை மிகப் பெருமையுடன் எழுதியிருந்தாய். உனது பெருமையை என்னால் மெச்ச முடியாமைக்கு வருந்துகின்றேன். அதேபோல் அன்றொரு நாள் மாலைப்பொழுதில் உனது பிரதேசத்தில் உள்ள கள்ளுத்தவறணையின் முன்னால் கள் அருந்தி இன்புற்றிருந்த இருபது பேரை வலுக்கட்டாயமாக பதுங்கு குழி வெட்ட அழைத்துச் சென்ற உன் வீரச் செயல் பற்றியும் பெருமிதப்பட்டிருந்தாய். உனதும், எனதும் இன்னோர் சகோதரம் என்ன செய்துள்ளான் தெரியுமா? தோளுக்குத் தோள் கைபோட்டபடி யாலியாக வீதி உலா வந்துகொண்டிருந்த பத்து இளைஞர்களையும் அப்படியே கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் இரண்டு நாள் பதுங்கு குழி வெட்ட வைத்துள்ளானாம். அவனும் இச் சம்பவத்தை என்னிடம் மிகப் பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

யுத்த அழிவுகளும், யுத்தத்திற்கான தியாகங்களும் நடந்து கொண்டிருக்கும் வேளையில், அவற்றைக் கண்கொடுக்காது, அவற்றிலிருந்து ஒதுங்கி நின்று கேளிக்கை வைபவங்களிலும், விழாக்களும் நடத்துவது தவறு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அதேபோல் கள் அருந்தலும் தவறானதுதான். பண விரயமாகின்றது. அவசியமற்ற சண்டை சச்சரவுகளைத் தோற்றுவிக்கின்றது. ஆகவே இது கண்டிக்கப்பட வேண்டியது தான். இளைஞர்களிலும், யுவதிகளிலும் கணிசமானோர் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தி இருப்பது, கவலைக்குரிய ஒரு விடயம் தான். எங்கள் தந்தையர் நாடு இவ்விதமானதோர் இக்கட்டுக்கு முகம் கொடுத்துள்ள இந்த வேளையில் எதுவித பொறுப்புணர்வும் இன்றி யாலியாக அரட்டை அடித்துத் திரியும் இவ் இளம் சந்ததியினர் சகிக்கவொண்ணா ஓட்டுண்ணிகள்தான். இதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

அப்படியானால், இவ்வித மானவர்களுக்கு எதிரான நடவடிக்கைகயிட்டு பெருமைப்படுவதில் என்ன தவறு என்று வினவலாம் அல்லவா? இந்தத் தவறைச் செய்தவர்கள் மக்களில் ஒரு பகுதியினர். அவர்கள் மக்கள் விரோதிகள் அல்ல. இப்பகுதியினர் சமூகக் கடமையை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் மனதில் இன்னமும் விடுதலை வேட்கைத் தீ கொழுந்து விட்டு எரியவில்லை. அடிமைப்படுத்தலுக்கு எதிராக முணுமுணுக்கவும், புறு புறுக்கவும் மட்டுந்தான் தெரியுமே தவிர அதற்கெதிராக போரிடும் துணிவை அவர்கள் இன்னமும் பெறவில்லை. தம்மைத்தாமே இன்னமும் புரிந்து கொள்ளாத இப்பகுதியினரையிட்டு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன அவர்களுக்கும் எமக்கும் இடையேயான முரண்பாடு எத்தன்மையது? இவை தான் இங்குள்ள கேள்வி.

நாம் அவர்கள் மேல் எடுக்கும் எந்த நடவடிக்கையும் அவர்களை எம்முடன் இணைந்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டது. அவர்களைப் பகைத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டதல்ல. மக்களின் ஒரு பகுதியினர் மேல் சமூக விரோதிகள் என்ற முத்திரை குத்தி

நாமாகவே அவர்களை எதிரிகளின் முகாமை நோக்கித் தள்ளிவிடக் கூடாது. எதிரிகளைக் கூட்டிக் கொள்வதுவும், எதிரிகளுக்கு சாதகமான சூழலை வளர்த்து விடுவதுவும் பெருமைப்படக் கூடியனவா?

சமுகத்தில் மனிதர்களிடையே நிலவும் முரண்பாட்டில் இருவகையுண்டு. ஒன்று மற்றயதை அழிக்கும் தன்மை கொண்டது. ஒன்றின் அழிவில் தான் மற்றதன் வாழ்வு தங்கியிருப்பதும் பகை முரண்பாட்டின் குணங்கள். சிறிலங்கா அரசிற்கு தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான முரண்பாடு பகைமுரண்பாடு. சிறிலங்கா அரசுடன் சேர்ந்து செயற்படுவோருக்கும் எமக்கும் இடையேயான முரண்பாடு பகைமுரண்பாடு. காட்டிக் கொடுப்போருக்கும் எமக்கும் இடையேயானது. தமிழீழ பொருளாதாரத்தை குலைக்க முற்படுபவர்களுக்கும் எமக்கும் இடையே யானதுமான முரண்பாடு கூட பகைமுரண்பாடுதான் இங்கு ஒன்றின் அழிவில்தான் மற்றதன் வாழ்வு தங்கியுள்ளது. ஏதோ ஒன்று அழிக்கப்படும்போது அல்லது செயலிழக்கும் போதுதான் இம்முரண்பாடு தீர்க்கப்படும். பகைமுரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வேறு மாற்றுவழி எதுவுமே இல்லை.

சினேகமுரண்பாடுகள் என்பவை எவை? முரண்படும் இரு அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொள்வதன் மூலம் மாத்திரம் தீர்க்கப்படும் முரண்பாடுகள் சிநேகமுரண்பாடுகளாகும். சிற்றூரவைக்கும் பிரதேசப் பொறுப்பாளருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் அவை பகைமுரண்பாடுகளா? இல்லை. அவை சிநேக முரண்பாடுகள் . மாவட்ட அரசியற் பொறுப்பாளருக்கும் பிரதேச அரசியற் பொறுப்பாளருக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளும் சிநேக முரண்பாடுகளேயாகும். இவற்றை எல்லாம் பகைமுரண்பாடுகளாகக் கருதினால் என்னவாகும்? இயக்கமே பற்பல துண்டுகளாக் உடைந்து சிதறித் தானே போய்விடும்.



சிநேக முரண்பாடுள்ள பகுதிகளைக் கையாள்வதில் எமது நோக்கம் அவ்விரு பகுதிகளிடையே ஐக்கியத்தை உருவாக்குதலேயாகும். முரண்பாடுகள்ள அவ்விரு பகுதிகளிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த தடையாக இருக்கும் அம்சங்களை நீக்குவதே எமது நோக்கமாகும்.

இவ்விதம் நோக்கும்போது எமக்கும் மக்களுக்குமிடையேயான முரண்பாடு எது என்று நீ எண்ணுகின்றாய். மக்களை அழிப்பதாக எமது நோக்கம்? அல்லது எம்மை அழிக்கவா மக்கள் விரும்புகிறார்கள்? எமக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் அது பகைமை முரண்பாடா? நிச்சயமாக அப்படி இல்லை;, இருக்கவும் முடியாது. அந்நிய சக்திகளுக்கு எமது மண்ணையும், மக்களையும் காட்டிக் கொடுத்து வந்த துரோக இயக்கங்களுக்கும், தமிழீழ மக்களுக்குமிடையே இருந்த முரண்பாடு பகைமை முரண்பாடு தான். இப்போதும்கூட அது அப்படித்தான். அதனால் தான் அவர்கள் தமழீழ மக்களை ஆயுதத்தால் அடக்கியும் மிரட்டியும் வைத்திருந்தார்கள்.

ஆனால் விடுதலைப்புலிகளுக்கும், தமிழீழ மக்களுக்குமிடையே நிலவும் முரண்பாடு சிநேகமுரண்பாடேயாகும். நாம் ஒரு மக்கள் புரட்சியை விரும்புகிறோம். அதற்காக மக்களைத் தயார் படுத்துவது எவ்விதம் என்பதே எம்முன்னால் உள்ள பிரச்சினை. மக்களின் மத்தியில் நிலவும் பலவீனங்கள் இதற்குத் தடையாக இருப்பதை நாம் உணர்கிறோம். மக்களின் சொந்த பலவீனமே மக்களைப் பின்தள்ளி வைக்கின்றது என்பதை நீயும்,நானும் எம்மில் அனைவரும் காண்கின்றோம். இதைக்கண்டு மனம் வெதும்புகின்றோம்.

இந்த நிலை கெட்ட மாந்தரைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் நீ இச் சிறு வயதிலேயே அடிக்கடி இரத்தக் கொதிப்புக்குள்ளாவதை நான் நன்கு உணர்வேன். உன் உணர்வுகளை நான் மதிக்கிறேன். மக்களின் பேடித்தனம் கண்டு வெந்து புண்ணாகும் உன் உள்ளத்து வடுக்களை மென்மலர் இதழ் கொண்டு வருடிக் கொடுக்க நான் தயாராக உள்ளேன். உன் வேதனை நியாயமானதுதான். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், என் ஆருயிர் உடன் பிறப்பே, இதற்காக நீ என்ன செய்யப் போகிறாய்? மக்களைத் தண்டிக்கப் போகிறாயா? மேடைகளில் ஏறி மக்களைத் திட்டித்தொலைக்கப் போகிறாயா? ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்று சொல்வார்களே ! அதை என்றும் மறவாதே. மக்களின் பலவீனமான குணாம்சங்களையும், பேடித்தன்மையையும் களைந்தெறிவதில் பொறுமை காட்டு; அதற்கான வேலைத் திட்டங்களை வகுத்துக்கொள்.உனது ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களுக்கும் உனக்கும் இடையில் ஒரு அந்நியோன்னியத் தன்மையை ஏற்படுத்துவதாகவும், மக்களைப் புரட்சிக்குத் தயார் படுத்துவதாகவும் அமைய வேண்டும். மக்கள் உன்னைக் கண்டு பயந்து ஒதுங்கக் கூடாது. அஞ்சி நடுங்கக் கூடாது. உனக்கு முன்னால் துதிபாடி உன்னை மகிழ்விக்க முற்படக்கூடாது. இவ்விதம் எல்லாம் மக்கள் நடப்பார்களே ஆனால் நீ மக்களை மேலும் பின் தள்ளி விட்டாய் என்றே பொருட்படும். நீ எதை விரும்புகிறாயோ அதற்கு எதிர்மாறான விளைவு ஏற்பட்டுவிடும் என்பது புரியவில்லை?

மக்களைப்படிப்படியாக அரசியல் மயப்படுத்து!
மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளில் கவனம் செலுத்து!
மக்களின் தவறுகளை விமர்சனம் செய், ஆனால் அவர்களின் மனம் புண்படும்படி நடந்துகொள்வதை தவிர்த்துக்கொள்!
பொறுமை, விட்டுக்கொடுப்பு, போதனை,. அரவணைப்பு, கண்டிப்பு இவை தான் சிநேக முரண்பாட்டைக் கையாள்வதற்கான வழிவகைகள்.

தனிமைப்படுத்தல், அவமானப்படுத்தல், தூக்கிஎறிதல் ,அடக்கி ஒடுக்கல், அவசியமானால் அழித்தொழித்தல் இவை தான் பகைமை முரண்பாட்டைக் கையாள்வதற்கான வழிவகைகள்.


மக்களுக்கும் உனக்கமிடையேயான முரண்பாட்டைக் கையாள்வதில் நீ எந்த வழிவகையைப் பின்பற்றப் போகிறாய். சிந்தித்துச் செயலாற்றுவாய் என எதிர்பார்க்கின்றேன்.

நீண்ட என் மடலைப் பொறுமையுடன் படிப்பதற்கு நன்றிகள். தயவு செய்து மீண்டும் ஒரு தடவை படித்துப் பார். இது தொடர்பான உன் அபிப்பிராயத்தைத் தயங்காமல் எழுது.
அடுத்த கடிதத்தில் இதே விடயத்தை வேறோர் கோணத்தில் இருந்து நோக்குவோம்.

விடைபெறுகிறேன்,
என் உடன் பிறப்பே.

பாசமுள்ள, அண்ணண்
அருண்.

புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்



www.padippakam.com



# எல்லையோர அச்சுறுத்தலை எதிர்த்து நிற்கும் மணலாறு

மணலாறு என்றதும், அவ்வூரில் தலை நிமிர்ந்து நிற்கும் காட்டு மரங்களும், தண்ணீர் முறிப்பு அணைக்கரையும் பணத்தைப் பணம் என்று பாராமல் முறையாக நீர்ப் பாய்ச்சி களை எடுத்து உரம் போட்டுப் பேணிக்காத்து நிற்கும் வயல்களும் தான் நினைவுக்கு வரும். நன் செய், புன் செய் இல்லாத மேட்டுப் பூமியில் தெங்கு காய்ச்சுச் சொரியும். கடலோரக் கிராமங்களில் தொழில் செய்யும் மீனவர் ஒரு புறம்.

மணலாறு எல்லை மாவட்ட, எல்லைப் பிரதேசம் என்ற நிலையில் மக்கள் நினைவில் வீரமும் இளையோடி நிற்பது சகஜம் தான்.

1989ம் ஆண்டு இந்திய இராணுவத்தின் அனர்த்தங்களால் மணலாறு வெறிச்சோடியது. 1990ம் ஆண்டு தமது நிலங்களில் மக்கள் மீளவும் குடியேறினார்கள். வாழ்க்கைகளை கட்டத் தொடங்கியது. தங்களுடைய நில புலங்களை பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சொந்தமாகச் சீவிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தினார்கள். பொருளாதார நடவடிக்கைகள் கருக்கட்டத்தொடங்கின.

மணலாற்றுக் கிராமங்களில் மே 1ம் திகதி- உல்கத் தொழிலாளர் தினத்தன்று குண்டுவீச்சு ஆரம்பிப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னதாக சிறிலங்கா விமானம் வானிலிருந்து துண்டுப் பிரசுரங்களைக் கொட்டி ஊரை விட்டுக்காலி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. ஏதோ ஒரு பரபரப்பு நிலவினாலும், மக்கள் தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறத் தயாராக இல்லை. வழக்கமான விவசாயமும் கரையோரக் கடற்றொழிலும் நடந்து கொண்டு இருந்தன. ஏப்ரல் 28ம் திகதி துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டன. என்றாலும் வழமைபோல் இரண்டு நாட்கள் எப்படியோ ஓடி மறைந்தன.

உயிர் சேதம் இல்லை.

---

மே தினம் முதலாம் திகதி காலை எட்டு மணியிருக்கும். செல் தாக்குதல் ஆரம்பமாகியது. சூரியன் ஆக்கிரமிக்கத் தொடங்கும் அந்த வேளையிலே குமுழமுனை, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணிப் பகுதிகளில் சரமாரியாய் செல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. முதலாம் திகதி குமுழமுனையில் ஆக மொத்தம் 45 செல்கள் தொடர்ந்தாற் போல் கருநாட்டுக்கேணியில் பதினைந்து செல்கள் இரவில் அந்தக் காட்டுக் கிராமங்களின் அமைதியைக் கலைத்த வண்ணம் ஆட்லறித் தாக்குதல்கள், இரவில் மணலாறு தூங்கவே இல்லை.

மணலாற்றில் கொக்குத்தொடுவாய் கடலால் சூழப்பட்ட கிராமம். முதலாம் திகதி மதியவேளை நாயாற்றுப்பக்கமாக கடலில் நிலை கொண்டிருந்த பீரங்கிப் படகுகள் இருந்தால்போல் பீரங்கித் தாக்குதலைக் கொக்குத் தொடுவாய்மேல் மேற்கொண்டன. முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் செம்மலை மீதும் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டன. மூச்சு விடாமல் சரமாரியான தாக்குதல் ஒருபுறம், மக்கள் படு சிரமத்துடன் குழிகளில் பதுங்கிக் கொண்டனர். மக்கள் முன்னெச்சரிக்கையாக இருந்ததால் உயிர்ச்சேதம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர். சிலர் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்து நகரத் தொடங்கினர். செம்மலைப் பகுதியில் பாதுகாப்புத் தேடி தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

இரண்டாம் திகதி ஆகாயத் தாக்குதலுடன் சேர்ந்தாற் போல் செல்களும் பரவலாக ஏவப்பட்டன. குமுளமுனையை முப்பத்தாறு செல்கள் பதம் பார்த்தன. கொக்குத்தொடுவாய் பக்கமாகவும் தாக்குதல்கள் இடம் பெற்றன. மக்கள் பாதுகாப்புத் தேடி அயல்கிராமங்களில் ஒதுங்கவேண்டிய நிலையும் உருவாகியது. துணைப்படையினரும், சில குடும்பங்களும் தாக்குதல்கள் மத்தியிலும் மன உறுதியுடன் பாதுகாப்பாய் இருந்தனர்.

மணலாற்றின் விளைச்சலும், கடற்றொழிலும், வியாபாரமும், செல்வமும், பிறவும் சிங்கள அரசை அச்சுறுத்தியதோ என்னவோ? மணலாற்றுக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட பரவலான ஆகாயத் தாக்குதல்களினாலும், செல் தாக்குதல்களினாலும் அப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகள் கைவிடப்பட்ட நிலையில் காட்சி அழிக்கின்றன.



### எழுபது வீடுகள் சேதம்

குமுளமுனைக் கிராமம் பொன் விளையும் பூமி. அதை மணலாற்றுக் கிராமத்தின் பழமுதிர்ச் சோலை எனலாம். அங்கொன்றும், இங்கொன்றுமாக வீடுகள் சேதமடைந்து கிடந்தன. வீதியின் திருப்பத்தில் கடையொன்று "ஒன்றடி மண்ணடியாய்" இடிந்து போய் கிடந்தது. இது இந்த ஊரில் பெரிய கடை.

துணைப்படை உறுப்பினரான திரு.க.சுப்பிரமணியத்தை அவர் வீட்டில் சந்தித்தோம். வயது ஐம்பதுக்கும் அறுபதுக்கும் இடையில் இருக்கலாம். மனக்குமுறல்களைச் சொல்லத் தொடங்கினார்.

குமுளமுனையில் குண்டு விழுந்ததும் ஒருவித பரபரப்புத் தொற்றிக் கொண்டது. பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் எனற காரணத்தால் பலர் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டார்கள். நான்கு ஐந்து குடும்பங்கள் தான் இப்போதைக்கு இங்கு இருக்கினம். மரவள்ளி, கச்சான் போன்ற பயிர் வகைகள் கால் நடைகளுக்கு இரையாகிவிட்டன. விவசாயமும் கால் கடைகளாலும் காட்டு மிருகங்களாலும் அழிக்கப்பட்டு விட்டது.

பக்கத்தில் குண்டு விழுந்து வீடுக்கூரை ஒரு பகுதி எரிந்தது. நான் நின்றபடியால் நெருப்பை அணைக்கக் கூடியதாக இருந்தது.

செய்கைக்காக வரம்பு கட்டி உழுத நிலம் அப்படியே கிடக்கிறது என்று விசனித்தார். ஊர் மக்கள் இடம் பெயர்ந்து தண்ணீர்ஊற்று, புதுக்குடியிருப்பு கிராமங்களில் வாழ்கின்றார்கள் என்றார்.

குமுளமுனை ஆறாம் வட்டாரம் பக்கத்துத் தெருவில் திருமதி. நிர்மலகுமார் சிவமதியைச் சந்தித்தோம். மிகவும் சந்தோசமாகக் காணப்பட்டார்.

நாம் நுழையும் போது மாமர நிழலில் நெல்லுக் குற்றிக் கொண்டிருந்தார். வீடு குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டதனால் வேறு வீட்டில் மாறியிருக்கிறோம். எமக்கு ஊரை விட்டு ஓட விருப்பமில்லை என்றார். பாடசாலை மாணவரான த.கனகசபை, சிவமதியின் வீட்டுப் பக்கமாக வந்தார். க.பொ.த (சாதாரணம்) வகுப்பு குமுளமுனை மகாவித்தியாலயத்தில் படிக்கிறார் அவருடன் பேச்சைக் கொடுத்தோம். அம்மாவுடன் இருக்கிறேன் குண்டு விழும்போதும் வீட்டுப்பக்கமாகத் தான் இருந்தோம். குண்டுகளால் பெரிய பாதிப்பு ஒன்றுமில்லை. பங்கரில் இருந்தோம் என்றார் கனகசபை.

குமுளமுனையில் ஆங்காங்கே வாழைகளும், மரங்களும் சரிந்து கிடக்க ஊர் அமைதியாகவே இருந்தது. பிற்பகல் மூன்று மணி யளவிருக்கும், அப்பகுதியில் திருமதி.ஞானப்பூங்கோதை கணபதிப்பிள்ளையைச் சந்தித்தோம். ஐந்து பிள்ளைகளின் தாய். கணபதிப்பிள்ளை அன்பாக எமக்கு இளநீர் வழங்கினார். சிறிது நேரம் கழித்து -

ஊரைவிட்டு ஓடியவர்கள் இப்போது வந்து போகிறார்கள். ஊரடங்கு எடுத்தால் வரலாம் என்று இருக்கிறார்கள். விமானத் தாக்குதலைச் சமாளிப்பதற்கு இடம் பெயர்ந்து போனவர்கள். ஊர் மக்கள் புதுக்குடியிருப்புக்குச் சென்று விட்டார்கள்.

நாங்கள் பதுங்கு குழியில் பாதுகாப்பாகத் தான் இருந்தோம். வீட்டின் மேலும் வெடிகுண்டு போட்டார்கள் என்று வீட்டைக் காட்டினார்கள். வீடு இடிந்து போய் கிடந்தது. இந்தியப்படையும் இவர்கள் வீட்டில் முகாம் இட்டிருந்தது என்றார்.

இப்போது திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு கட்டிக்கொடுத்த வீடுகளில் வாழ்கின்றோம். அவர்கள் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பில் வாழ்கின்றார்கள். குமுளமுனையில் திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் சுமார் 450 பேர் வரை தங்கியிருந்தார்கள். இவர்கள் பாதுகாப்புத் தேடி முள்ளியவளை, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் வாழ்கின்றார்கள்.

தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் உயிர்ச்சேதம் எதுவுமில்லை. ஒரு சிலர் காயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். சொத்துக்கள் தான் சேதம். எழுபது வீடுகள் வரை முழுதாகச் சேதமுற்றிருந்தன.

### அகதிகள் ஆர்ப்பாட்டம்••

அதிகாரிகள் அகதி முகாம்களில் தங்கியிப்போரை மிரட்டித் துன்புறுத்தியபோதும் அகதிகள் இப்படியான முறன்பாடான செயலை ஏற்க மறுத்துள்ளனர். இதன் பின்னர் சிறிலங்கா அரசு முகாம்களுக்கு வெளியே உள்ள அகதிகளுக்கும் நிவாரனப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

## ஓர் உணர்வு பூர்வமான தமிழீழத்தைக் காணக்கூடியதாக உள்ளது

தமிழீழப் பகுதிகளில் பெருந்தொகையான மக்கள் தினமும் விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்து வருகின்றனர். ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், தனியார் துறைஊழியர்கள் ஓய்வு நாட்களில் காயமடையும் போராளிகளை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலை மாணவ, மாணவிகள் விடுதலைப் போராட்டத்திற்கு தம்மாலான பங்களிப்பினை ஆற்றி வருகின்றனர். சிறியோர், முதியோர் என்ற பேதமின்றி ஏதோ ஒரு வகையில் விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். தாய்மார்கள் தங்களை விடுதலைப்புலிகளின் மக்கள் அமைப்புக்களில் இணைந்து பங்காற்றி வருகின்றனர். தமிழீழத்தின் ஒரு வயோதிபத் தாய் குறிப்பிடுகையில் சாகப்போகின்ற வயதில் விடுதலைப் போராட்டத்திற்கு தன்னலானவற்றை செய்வதே கடசிக் காலத்தில் தனக்கு ஆத்ம சாந்தியைக் கொடுக்கும் எனத் தெரிவித்தார். இவற்றைப் பார்க்கும் போது ஓர் உணர்வு பூர்வமான தமிழீழத்தை தற்பொழுது காணக்கூடியதாக இருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



# சாத்தானின் வேதம்போல் பிரேமதாசாவின் சமாதானம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரே மதாசா தன்னை சமாதானத் தின் பிரதமராக வெளிப்படுத் தும் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வரு கிறார்.

அண்மையில் ''யுத்தத்தினால் எவரும் வெற்றி பெறுவ தில்லை, எல்லோருமே தோல்வி அடைபவர்கள் தான் சமாதானத்திலேயே அனைவரும் வெற்றியடை கின்றனர்'' என்று தெரிவித்த ஜனாதிபதி பிரேமதாசா ''ம னிதனின் பிரச்சிகளுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும். மோதல் கள் மூலம் தீர்வு காண முடி யாது'' எனவும் குறிப்பிட்டுள் ளார்.

இவ் அறிவிப்பு சாத்தான் வேதம் ஓதும் கதையாகவே எமக்குத் தென்படுகின்றது. மேற்கண்ட அறிவிப்பின் விடுத்த அதே அறிக்கையில் பிரேமதாசா தெரிவித்திருந்த ஏனைய விடயங்களையும் நாம் கவனத்தில் கொண் டால் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

''இப்போது எனது சிந்த னைகள் யுத்தத்தில் தங்களது உயிர்களை இழந்த, காயம டைந்த போர் வீரர்களுடன் நிலைத்து நிற்கின்றது. நாட் டையும் மக்களையும் பாது காத்தமைக்காக மகத்தான சேவைகள் புரிந்த முப்ப டையினருக்கும் பொலிசாருக் கும் அரசாங்கத்தினதும் மக் களதும் நன்றியினைத் தெரி வித்துக் கொள்கிறேன்'' எனவும் அதே அறிக்கையில் பிரேமதாசா தெரிவித்திருந் தார்.

'நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கான மகத்தான சேவைகள்' என பிரேமதா சாவினால் பாராட்டப்படும் சேவைகள் தான் எவை?

தமிழ்ப் பகுதிகளில் மக்கள் வாழும் குடியிருப்புக்களின் மீது தொடர்ச்சியாக வீசப்பட் டுவரும் குண்டு வீச்சுத் தாக் குதல்களையா?

நேபாம் குண்டுகளையும் மனித பலம் போன்ற கழிவுப் பொருட்களையும், நோய்க் கிருமிகளையும் மக்கள் மீது வானிலிருந்து வீசுகின்றன இழிச் செயலையா?

தமிழ் மக்கள் மீது, குறிப்பா கக் கிழக்கு மாகாணத்தில் அரசபடையினர் கட்டவிழ்த் துவிடும் காட்டு மிராண்டித் தனத்தையா?

தலைவேறு, முண்டம் வேறாக தமிழ் உயிர்கள் சிதைக்கப்பட்டு வீதிகளில் வீசப்படுகின்றமையா?

தமிழ்ப் பெண்கள் அரசப டைகளால் பாலியல் வன் முறைக்கு உட்படுத்தப் படு கின்றமையா?

கொக்கட்டிச்சோலைப் படு கொலை போன்ற மினித நாக ரிகமே வெட்கித் தலைகு லைனியும் மிருகத்தனமா னR நடவடிக்கைகளையா?

படையினரிடம் குடிகொண் டிருக்கும் தமிழின ஒழிப்பு வெறியினையா?

இவற்றில், எல எவை நாட் டிற்கும் மக்களுக்குமா படை யினரால் ஆற்றப்பட்ட மகத் தான சேவைகள்?

சிங்கள பௌத்த பேரினவா தத்தின் நலன்களைத் தமிழ்த் தேசிய இனத்தின் மீது திணிக்கும் நோக்குடனேயே சிறிலங்காஅரசு இன்றைய யுத்தத்தினை நடத்திக் கொண்டிருக்கின்றது.

சிங்கள பௌத்த மேலாதிக் கத்தை நிலைநிறுத்தும் வெறியுடன் இன்றைய யுத்தத் தில் அரச படையினர் மிரு கத்தனமாக நடந்து கொள் கின்றனர். 'புலிகளை அழிக் கின்றோம்' என்ற பெயரில் தமிழீழ மக்கள் மீது சிறி லங்கா அரசால் மேற்கொள் ளப்படுவது, யுத்தம் என்ற பெயரிலான இனப்படுகொ லையே.



சிறிலங்கா அரசின் இனப்ப டுகொலையினைத் தடுத்து நிறுத்தி தமிழீழ மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வழி கோல விடுதலைப்புலிகள் தியாகம் நிறைந்த போராட் டத்தினை நடாத்திக் கொண் டிருக்கின்றனர். தமிழீழ மக் களும் சமாதான விரும்பிகள் தான். ஆனால் சமாதானம், அமைதி என்ற பெயரில் அடிமை வாழ்க்கையினை ஏற்றுக்கொள்ள தமிழீழ மக் கள் தயாராக இல்லை.

இதன் வெளிப்பாடாக நிபந் தனையற்ற பேச்சுவார்த் தைகளுக்குத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்பு லிகள் அறிவித்துள்ளார். ஆனால்,சிறிலங்கா அரசு ஏற் றுக்கொள்ள முடியாத, சமா தானத்துக்கு வழிகோல முடியாத மூன்று நிபந்தனை களை முன்வைத்துக் கொண்டு சமாதானம் பற்றிப் பேசுகின்றது.

சமாதானம் என்ற பெயரில் கடந்த காலங்களில் சிறி லங்கா அரசாங்கங்களின் ஏமாற்று வரலாற்றை உலக றிந்திருந்தும் இன்று விடுத லைப்புலிகளின் நம்பகத் தன் மையினைப் பற்றிப் பேசுகின் றது. உண்மையில், ஓடுக்கப் பட்ட மக்கள் என்ற வகை யில், கடந்த 40 ஆண்டு காலம் மனித உரிமை மீறல் களுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் மக்கள் என்ற வகை யில், சிறிலங்கா அரசாங்கங் களின் இன ஒழிப்பு முயற் சிக்கு பலியாகிவரும் என்ற மக்கள் என்ற வகையில், சிறிலங்காவின் ஏமாற்று வரலாற்றினால் பந்தாடப் பட்ட மக்கள் என்ற வகை யில் சிறிலங்கா அரசுடன் பேச்சுகளை நடத்துவதற்கு முன் நிபந்தனைகளை வில யுறுத்தும் உரிமை தமிழீழ மக் களுக்கே உண்டு. இருந்த போதும் தமிழீழ மக்களின் தேசியத் தலைமை முன் நிபந்தனையற்ற பேச்சுக்க ளுக்குத் தயாராக இருக்கின் றது. ஆனால் ஓடுக்க அரச இயந்திரத்தின் தலைவர் பிரேமதாசா, பேச்சுக்களுக்கு முன் நிபந்தனைகள் விதிக் கின்றார்; சமாதானம் பற்றிப் பேசுகிறார்; காட்டுமிராண்டித் தனமான தனது படைக ளைத் தட்டிக்கொடுக்கின் றார். மீண்டும் சமாதானம் பேசுகின்றார். தமிழீழ மக்க ளின் விடுதலைப் போராட் டத்தை நசுக்க சமாதானம் என்ற வார்த்தையைப் பயன் படுத்துகின்றார். பிரேமதா சாவின் சமாதானம் என்பது ஓடுக்குமுறைக்கு வழிசமைக் கும் ஒரு நடைமுறை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

# கொழும்பில் பரீட்சை ஒரு முன் உதாரணம்

வடக்கு கிழக்கு மாகாணத் தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக் கும், சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிற்கும் நிய மிக்கப்பட்ட எண்பது டாக்டர் கள் இன்னும் பதவிகளை ஏற்கவில்லை எனத் தெரிய வருகின்றது.

அதே வேளை கொழும்பில் தங்கியுள்ள யாழ் பல்கலைக் கழக மருத்துவப்பீட மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் கேட் டுக் கொண்டதற்கிணங்க கொழும்பில் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

யாழ் பல்கலைக்கழக விரி வுரையாளர்கள் சிலரும், மாணவர் சிலரும் யாழ்ப்பா ணத்தில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பிலும், உலகின் வேறு பாகங்களிலும் தரித்துள்ளனர். வடக்கில் நிலவும் அசாதாரண நிலை யினால் கற்பித்தலுக்கும், கற் றலுக்கும் ஏற்ற சூழ்நிலை இங்கு இல்லை என்பதே அவர்களின் வாதமாகும்.

ஆனால் யாழ் பல்கலைக்க ழகத்தைச் சேர்ந்த 75 வீதத் திற்கு மேற்பட்ட மாணவர் களும், விரிவுரையாளர்களும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு சமூகம் கொடுக்கின்றார்கள். விரிவுரைகள் பரீட்சைகள் நடைபெறுகின்றன. அத் தோடு பட்டமளிப்பு விழாவிற் கான ஏற்பாடுகளும் நடை பெறுவதாகத் தெரியவருகின் றது. சிலவேளைகளில் சில தடங்கல்களைத் தவிர சகல விடயங்களும் வழமைபோல் நடைபெறுகின்றன.

இந்நிலையில், யாழ்ப்பாணத் தில் அசாதாரண நிலைமை நிலவுவதால் பரீட்சைக்குத் தோற்ற முடியாது எனக் கூறும் மருத்துவபீட மாண வர்களுக்கு கொழும்பில் பரீட்சை நடத்த முற்படுவது

பரீட்சை எழுத முற்படுபவர் கள் நான்காம் ஆண்டு விரி வுரைகளையும் அங்கேயே வையுங்கள் என்று ஏன் கேட் கமாட்டார்கள்? இதற்கு கொழும்பில் தரித்துள்ள விரிவுரையாளர்களும் விருப் பம் தெரிவிக்கலாம். தற் பொழுது பரீட்சை நடத்துவ தால் இவர்களின் இந்தக் கோரிக்கைக்கு நியாயம் கற் பிக்கக் கூடியதாகவும் போய் விடக் கூடும்.

ஆகையினால் தமது முழுமை யான சுயநலத்திற்காக மட் டும் கல்வியைப் பயன்படுத்த முற்படுவோருக்காக நெருக் கடிகளின் மத்தியில் செயற் படும் பல்கலைக்கழகம் சிர மப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதேவேளை முன் உதாரணத்தைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்குமே யானால் தொடர்ந்தும் பல சிரமங்களைப் பல்கலைக்க ழகம் எதிர்நோக்க வேண்டி வரும் என்பதும் வெளிப்படை. தவறான முன் உதாரணம் என்றே கொள்ள வேண்டும்.

ஒரு சிலரைத் தவிர மருத் துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்களும் அங்கிருந்து வெளியேறும் டாக்டர்களும் சமூக நோக்குடன் மண்ணிற் கும், மக்களுக்கும் சேவை செய்வதாக இல்லை என்பது கவலை தரும் ஓர் உண்மை யாகும். இலங்கையில் அதிக அளவில் டாக்டர்களை உருவாக்கிய வடகிழக்கில் தற்போது டாக்டர்கள் பற்றாக் குறையால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ள னர்.

அகதிமுகாம்களில் வெளி நாட்டு டாக்டர்கள் சேவை நிறுத்தப்பட்டதனால் தொற் றுநோய்களும், மரணங்களும் அதிகரித்துள்ளன. கடந்த ஏப் ரல் மாதத்தில் மட்டும் மடு அகதிமுகாமில் 8 குழந்தை கள் வயிற்றோட்டத்திற்கு பலியாகியுள்ளனர்.

இவ்வாறாக மக்கள் இங்கு அவஸ்தைப்பட்டுக் கொண் டிருக்கையில், எமது டாக்டர் கள் தென்னிலங்கையிலும், வெளிநாடுகளிலும் சேவை செய்கின்றனர். இந்நிலை யில், மீண்டும் அவ்வாறான நோக்கையே முழுமையாகக் கொண்டு கொழும்பில் தரித் திருக்கும் மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் சிர மப்பட்டு ஏன் பரீட்சை நடத்த வேண்டும்?

தற்பொழுது கொழும்பில் தரித்துள்ள மாணவர்கள் திட் டவட்டமாக அங்கு சென்று சேவை செய்யப் போவ தில்லை. அவர்களில் பெரும் பாலானோர் கொழும்பில் கூடத் தரிக்கப் போவ தில்லை. பட்டத்தைப் பெற் றுக் கொண்டு வெளிநாடு செல்லவே அங்கு தரித்துள் ளனர்.

இவர்களுக்காக நாம் ஏன் எமது அரிதான வளங்களைப் பயன்படுத்த வேண்டும்? ஏன் முன் உதாரணங்களைத் தோற்றுவிக்க வேண்டும்?

மூன்றாம் ஆண்டு மாணவர் களாகக் கொழும்பில் நின்று

# பேச்சிற்கு மாறாக யுத்தத்தை நடாத்துகின்றீர்கள்

யாழ். பிரசைகள் குழு பிரேமாவிற்குக் கடிதம்.

இனப்பிரச்சினையைத் தீர்ப் பதற்குச் சமாதானத் தீர் வைப்பற்றிய கருத்தைப் பல சந்தர்ப்பங்களில் முன் வைத் துவரும் நீங்கள், அதற்கு மாறாக வடக்கிலும்,கிழக்கி லும் யுத்தத்தை மேலும் விஸ் தரித்து வருவது மனவேத னைக்கும், ஏமாற்றத்திற்கும் உரியதாகும் என்று பிரசை கள் குழு ஜனாதிபதி ஆர்.பி ரேமதாசாவுக்கு அனுப்பி யுள்ள கடிதத்தில் தெரிவித் துள்ளது.

புலிகளுக்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு, தமி ழர்களை அழித்தொழிப்பது தான் அரசின் திட்டமாகும். மனித உரிமைகளுக்கு மதிப் புக் கொடுக்காததையும் அக் கறையின்மையையும் இது காட்டுகிறது. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்திலும் வேண்டும் என்றே ஊரடங்குச் சட்டம் போன்ற தகவல்கள் ஏற்படுத் தப்படுகின்றன. ஊரடங்கின் போது க.பொ.த பரீட்சையை நடத்த அனுமதி உண்டு. ஆனால் கப்பலில் இருந்து உணவுப் பண்டங்களை இறக்க ஊரடங்கு தடையாக உள்ளது இவ்வாறு அக்கடி தத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புத்தளம். அநுராதபுரம், பொலநறுவை ஆகிய இடங் களில் ஒழுங்காக உலர் உணவு வழங்கப்படுகிறது. மேலதிகமாக செஞ்சிலு வைச் சங்கமும் உணவு

7ம் பக்கம் தொடர்ச்சி

www.padippakam.com



**யூகோஸ்லாவிய மொழி ரீதியான மாகாணங்களும் சனத்தொகை விகிதாசாரமும் .**

**மாகாணங்கள்**

-----------------

**பொஸ்னியா, குரோஸியா,மசடோனியா, மொன்டெங்ரோ, சேர்பியா,ஸ்லோவேனிடினா,**

**சனத்தொகை**

----------------

**யூகோஸ்லாவியா மொத்தம் 23200 மில்லியன்**
**சேர்பியா- 36.3%**
**குரோஸியா-19.7%**
**முஸ்லிம்கள்-8.9%**
**ஸ்லோவேனியா-7.8%**
**அல்பேனியர் -7.7%**
**மெஸடோனியர்-6.0%**
**மொண்டெங்கோவர்-2.6%**

# வரலாற்றுப் பின்னணி!

வரலாற்று ஆரம்ப காலத்தில் அகண்ட ரோமப் பேரரசின் பகுதிகளாக இருந்து பல ஐரோப்பிய நாடுகளில் யூகோஸ்லாவியாவும் ஒன்றாகும். ரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றதும் மேற்கூறிய மாநிலங்கள் தனி அரசுகளாக நீண்டகாலம் ஆட்சி செலுத்தினர். கி.பி. 14ம் நூற்றாண்டளவில் சேர்பியாவை மையமாகக் கொண்டு பல்கன் பேரரசு வளர்ச்சியடைந்தது. இதன் வீழ்ச்சியின் பின் இப்பிரதேசங்கள் துருக்கியப் பேரரசு வசமாகியது. மலைப் பிரதேசமான மொன்டெங்ரோ துருக்கியர் வசமாகாது தனி அரசாக இருந்தது. சில காலத்தில் குரோசியாவும் ஸ்லோவேனியாவும் ஆஸ்திரிய கங்கேரிய பேரரசு ஆட்சிக்குள்ளாகியது.

1878ல் சேர்பியா தனி அரசானது. இதன் பின் 1918 வரை சேர்பியாவும் குரோசியாவும் இயங்கி வந்தன. பூரண சுதந்திரமுள்ள தனி அரசுகளாக இயங்கி வந்தன. இதன் பின் சேர்பியா, குரோசியா, ஸ்லோவேனியா முதலாவது பீற்றர் தலைமையிலான முடியாட்சி நாடாகியது. பின்பு மொன்டெங்ரோ இந்நாடுகளுடன் இணைக்கப்பட்டது. 1921ல் பீற்றரின் மகன் அலெக்ஸான்டர் ஆட்சிப் பொறுப்பையேற்றதும் இப்பிரதேசங்களை யூகோஸ்லாவியா (தெற்குஸ்லாவியர்களின் நாடு) எனப் பெயரிட்டான். இதற்கு குரோஸியர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தாலும் இராணுவ ரீதியான அடக்குமுறை ஆட்சி மூலம் இவை ஒடுக்கப்பட்டன. 1934ல் இரண்டாவது பீற்றர் ஆட்சிக்குவர கிட்லரின் படை இவனை 1941ல் நாட்டைவிட்டு விரட்ட இவன் இங்கிலாந்தில் தஞ்சமடைந்தான். ஜேர்மனியின் பிடியில் இருந்து நாட்டை விடுவிக்க சேர்பியரைக் கொண்ட அரசன் விசுவாசமிக்க "தந்தையர் நாட்டு இராணுவம்"

என்ற அமைப்பும் கம்யூனிஸ்ட்டுக்களைக் கொண்ட தேசிய விடுதலை இராணுவமும் மாசல் டிட்டோ தலைமையில் போராடின. கம்யூனிஸ்ட்டுக்கள் சோவியத் ரசியாவின் உதவியுடன் நடாத்திய போராட்டத்தால் 1945ல் ஜேர்மனியர் விரட்டப்பட்டு யூகோஸ்லாவிய சமஸ்டிக் குடியரசு அமைக்கப்பட்டது.

கம்யூனிஸ ஆட்சியே பல மொழி மாநிலங்களை இணைத்து வந்தது.

இவர்கள் ஆட்சிக் காலத்தில் அரசனுக்கு விசுவாசமான கிளர்ச்சிகள் ஒழிக்கப்பட்டு சோவியத் முறையிலான நிர்வாகம் கொண்டு வரப்பட்டது. 1953ல் டிட்டோ சோவியத் முறையை நிராகரித்து விவசாயிகள்,தொழிலாளிகள் நிர்வகிக்கும் புதுவிதமான கம்யூனிஸ முறையை அறிமுகப்படுத்தினார்.

*மாசல் டிட்டோ தலைமை*

---------------------------

வெற்றிகரமாக ஜேர்மனியரை விரட்டியமை நாட்டைப் பொருளாதார சுபீட்சமடைய வைத்தமை பெருமளவிற்கு மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கியமை போன்றவற்றால் நாட்டின் மானசீகத் தலைவராக இவர் போற்றப்பட்டார். இவருக்கு இருந்த திறமையும் செல்வாக்கும் 1960 வரை தேசிய இனப்பிரச்சினை எழாதவாறு தடுத்து வந்தது. இன்னொரு வழியில் கூறினால் டிட்டோவின் மானசீகத் தலைமையும் கம்யூனிஸ சித்தாந்தமுமே யூகோஸ்லாவிய தேசத்தை தற்காலிகமாகப் பிணைத்து வைத்திருந்தது எனலாம்.

குரோஸியாவும், ஸ்லோவேனியாவும் யூகோஸ்லாவியாவில் பிணைக்கப்பட்டமை சரித்திரத்தில் இடம் பெற்ற தற்செயலான விபத்துக்களில் ஒன்றேயாகும்.

ஆசியாவில் தனிநாடுகளாக இருந்த பல நாடுகள் ஜரோப்பியர் ஆட்சிக்குள் வந்ததும் ஒரு நாடு ஆக்கப்பட்டது போலவே ஜரோப்பாவில் நடந்து முடிந்த போர் முடிவினால் எழுந்த நிலை காரணமாகத் தனிநாடுகளாக இருந்த பல நாடுகள் தற்செயலாகப் பெரியநாடுகளாக உருவாக வேண்டி வந்தது. ஆனால் இவ் வரலாற்று விபத்துக்களால் ஏற்பட்ட நாடு எனப்படும் அமைப்பு தொடர்ந்தும் இயங்க முடியாத நிலையே இன்று உலகில் காணப்படுகிறது. தனி மொழி, கலாச்சாரம் வரையறுக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய தேசிய இனங்கள் தற்காலிகமாகவே வேறொரு நாடுகளின் அங்கமாக இருக்க முடியும் இவ்வாறான நாடுகளில் ஏதாவது ஒரு தேசிய இனம் ஓரளவு பெரும்பான்மை சனத்தொகையைக் கொண்டிருக்குமானால் அத்தேசிய இனம் பிற இனங்கள் மீது பாரபட்சத்தைக் காட்ட ஆரம்பித்தது. பெரும்பான்மை என்ற நிலையில் இருந்து கொண்டு அடக்குமுறை, உள்நாட்டுப் போர், இனப்படுகொலை என்பவற்றைப் பிறதேசிய இனங்கள் மீது கட்டவிழ்த்து விடுகிறது. 1960 களின் ஆரம்பத்தில் குரோஸியர்கள் இதனை எதிர்த்தனர். பின்னர் 1970 களில் ஸ்லோவேனியர்களும் இதைப் பின் பற்றினர்.

இரண்டாவது சுதந்திரப் போரே இன்றைய தனிநாட்டுக் கோரிக்கையாகும்.

வளத்திலும், உல்லாசப் பயணிகள் வருமானத்திலும் குரோஸியா யூகோஸ்லாவியாவில் முதலிடம் வகிக்கிறது. ஸ்லோவேனியாவும் தனித்தியங்கக் கூடிய பொருளாதாரப் பின்னணி வகிக்கிறது. இப்பிரதேசங்களை பெரும்பான்மை சேர்பியர் தமதாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டும்,பாரபட்சம் காட்டியும் வந்துள்ளனர். இக்கால கட்டத்திலேயே குரோஸியரும், ஸ்லோவேனியரும் தாம் முன்பு தனிநாடுகளாக இருந்தமையை எடுத்துக்காட்டி முதலாவது சுதந்திரப் போரில் பேரரசுகளுக்கெதிராகப் போராடினோம். இன்று பெரும்பான்மை அரசுகளுக்கு

எதிராக போராடுகின்றோம் என்கின்றனர்.

சமஸ்டிச் சலுகையானது, தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்த முடியாத பெரும்பான்மையினர் அளிக்கும் நெருக்கடிச் சலுகையே

முதலில் விழிப்புணர்வை அடக்கப்பார்த்து, அதனாலும் கட்டுப்படுத்த முடியாவிடில் அதிகாரப் பரவலாக்கம் என்று கூறி குரோஸியர்

ண்டாந்தர நிலைக்குத் தள்ளுமேயானால் அப்பிரதேசத்து பிறதேசிய இனங்கள் தமது சுதந்திரப் போரை நடாத்தி சுதந்திர தனியரசு காண முற்படும் என்பதையே யூகோஸ்லாவியாவின் இன்றைய நிகழ்ச்சிகள் கூறுகின்றன.

களை வலைக்குள் விழுத்தப் பார்த்தார்கள். பின்பு டிட்டோ ஒவ்வொரு இனத்தவரும் மாறி மாறி ஒரு வருடங்கள் ஜனாதிபதியாக இருக்க அரசியல் சீர்திருத்தம் செய்து பார்த்தார்.

*ஒரு நாட்டுக்கு எட்டு ஜனாதிபதிகள்*

--------------------------------------

சமஸ்டி மூலத்தீர்வில் வழங்கப்படக் கூடிய அதிக பட்ச சலுகைகளும் பலனளிக்காது போகவே இவ் எட்டு இனரீதி மாகாணத்தைச் சேர்ந்த எட்டு இனத் தலைவர்கள் ஜனாதிபதியாக இருக்கும் ஒரு புது அமைப்பு இந் நாட்டில் உருவாக்கப்பட்டும் சுதந்திரக் கோரிக்கையை அடக்க முடியவில்லை.

பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு இவ்வாக்கெடுப்பில் இரு பிதேசத்து மக்களும் தனித்தனிச் சுதந்திர நாடுகளாக தாங்கள் பிரகடனப் படுத்துவதாக அறுதிப் பெரும்பான்மை சம்மதத்தைத் தந்துள்ளனர். எந்த சமஸ்டிச் சலுகைகளும் இவர்களைத் திருப்திப்படுத்தவில்லை.

சமஸ்டியில் திருப்தி காண முடியாத தேசிய இனங்கள் இரண்டாவது சுதந்திரப் போரை நடத்துவது தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்ச்சி.

R. S. விசாகன்.

## பிரேமதாசா மீது ••

பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதல் தேவை. ஜனாதிபதிக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவில், கொலை, பொய்ச் சாட்சியம், அரசியல் சாசன மீறல்கள் நாட்டின் இப்போதைய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்பட்டுள்ளன. இராணுவத் தலைமைப் பீடம் ஆட்சியைக் கைப்பறக்கூடியதோர் சூழ்நிலை தோன்றியிருப்பதாகவும் கருதப்படுகிறது. இந்த 6 பக்கக் குற்றச்சாட்டு மனு குறித்த விவாதம் எப்பொழுது நடைபெறும் என்பது அறிவிக்கப்படவில்லை.

## விடுதலைத் தீ ••

வீரர்களைப் பற்றியும், எமது இலட்சியத்தைப் பற்றியும் புரிந்து கொள்ளத்தான் போகின்றார்கள். தமிழீழம் விரைவில் எடுக்கத்தான் போகின்றார்கள் அந்தப் புலி வீரர்கள். வீரமரணத்தைத் தழுவுகின்ற வீரர்களும்,வீரிகளும் தாம் விட்டுச் செல்லும் கடமையை சகல போராளிகளும் மக்களும் தொடர்ந்து செய்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே இறுதி மூச்சையும் காற்றுடன் கலக்க அனுமதிக்கின்றனர்.

## பிரித்தானியா ••

கிட்டுவை நாடு கடத்தும் ஆபத்து தொடர்ந்து நிலவுகிறது. சிறிலங்காவிற்கு நேரடியாக அனுப்பப்படாவிடினும் அவரது விருப்பிற்கு மாறாக மூன்றாம் நாடொன்றுக்கு அனுப்பப்படுதல் சாத்தியமே. மேலும் அம் மூன்றாம் நாட்டிலிருந்து சிறிலங்காவிற்கு அனுப்பப்பட்டு அங்கு சித்திரவதைக்கும்,இறுதியில் மரணத்திற்கும் உள்ளாக்கப்படும் பேராபத்தும் உண்டு.

இதற்கிடையில் பிரித்தானிய அரசு திரு.கிட்டு பிரித்தானியாவிற்கு மீண்டும் வருவதற்கு தடைவிதித்துள்ளது.

## பேச்சிற்கு •••

வகைகளை வழங்குகிறது. ஆனால் வடக்கையும் கிழக்கையும் பொறுத்தவரை மனித நேய ஸ்தாபனங்களும், செஞ்சிலுவைச் சங்கமும் கையாலாகாத நிலையிலேயே உள்ளன என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொக்குப் பிடிப்பதற்கு கொக்கின் தலையில் வெண்ணை வைத்து, வெண்ணை உருகி கொக்கின் கண் மூடும் என்று காத்திருக்கும் சிலரும் எம்மிடையே உண்டு.**

**வே.பிரபாகரன்.**

படிப்பகம்

www.padippakam.com

## அடையாளக் குறிப்புகள்

ஓ!. நண்பனே இவர்கள் யார் என்று
உனக்குத் தெரிகிறதா?
இவர்கள் .....
வானத்தில் மின்னி மறைகின்ற வெறும்
நட்சத்திரங்கள் அல்ல.
ஆயிரங்கோடி ஒளிக்கரம் பொருந்திய
சூரியப் புதல்வர்கள்;
விடுதலைத் தீ கனன்று எரிகின்ற
அக்கினிக் கோளங்கள்!
இவர்கள்..
எம்மை ரட்சிப்பதற்காக அனுப்பப்பட்ட
தேவ குமாரரல்ல.
எமது தாய் மண்ணிலே மைந்தர்கள்.
ஏகாதிபத்திய சப்பாத்துகள் இவர்களை
ஏறி மிதித்திட்ட போதும்
நெருஞ்சி முள்ளும் விடுதலைப்
பாதையில் கிடந்து கீறிட்டபோதும்
தளர்ந்தாரா? தலைபணிந்தாரா?

ஒற்றைப்பனை நின்று மோனத்தவம் செய்யும்
பச்சை வயல்களினூடே....
புழுதிக்காற்றுடன் கலந்த மண்வாசனை
எழுந்து நாசியை அடைக்கும் எங்கள்
கிராமங்களின் மணற் தெருக்களினூடே
பச்சோந்திகளையும் பாதுகாப்பாளரையும்
ஓட ஓட விரட்டி அடித்தனர்.





முதுகெலும்பு இருந்தும் வளைந்து நின்ற
எமது முதுமைத்தனம் விலக்க
விடுதலை வேள்வியில் தம்மை
ஆகுதிப் பொருள் ஆக்கினர்.
தாயகத்தின் விடுதலையை தியாகச்
செங்குருதியால்
எழுதிப் பார்க்கத் துடித்தனர்.
எங்கள் தேசத்தில் ஓடும் காட்டாறுகளின்
சலசலப்பை
கேளுங்கள்..
இந்தத் தியாகிகளின் பெயர்
சொல்வனால்தான் அவை
பெருமை பெறுகின்றன.
அசைகின்ற மரங்களைக் கேளுங்கள்
மலர்கின்ற ஒவ்வொரு
மலர்விலும் இப் போராளிகள்
பிரதி பலிக்கின்றார்கள்
வீசுகின்ற காற்றினில் வரும்
வேங்கைகளின் சாம்பர்
பட்டதனாற்தான் இங்கே சுதந்திரத்
தென்றல் வீசியது.
அவர்கள் செந்நீர் சிந்தியதால்தான் இங்கே
மங்கையர்கள் நிம்மதியாய் திலகமிடுகிறார்கள்.
இந்தப் போராளிகளின் புதைகுழிகள்தான் இங்கு
மக்களின் எழுச்சிக்கான அத்திவாரங்கள்
அவர்களது ஒவ்வொரு மூச்சுமே
எமது இதயத் துடிப்புகள்
அவர்களது நினைவுகளே எம்மை
வழிப்படுத்தும் யாப்புகள்
இப்பொழுது இவர்களை உன்னால்
இனங்காண முடிகிறதா நண்பா.......?

தமிழீழ விடுதலைப் புலிகள் (பிரித்தானியக் கிளை)
54 Tavistock Place, London WC1H 9RG
Tel : 071-837 7162 Fax : 071-278 5666.

தொலைபேசிச் செய்திச் சேவை இல.
தமிழ் : 071-837 0808
ஆங்கிலம் : 071- 833 0949

அச்சுப்பதிப்பு: செல்வம் அச்சகம். தொலைபேசி: 081-478 6766.

படிப்பகம்